சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**<u>ஆணை நாள் 12.06.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**<u>வழக்கு எண். NC 247/E/2025 (SA 13109/E/2024)</u>**

திரு.அசரப் அலி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
வக்ஃபு ஆய்வாளர்,
வக்ஃப் கண்காணிப்பாளர் அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
ஈத்கா மஸ்ஜித்@ அலி குத்பா தைக்கால்,
இரயில்வே காலனி, தஞ்சாவூர்-613 001.

******

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 26.11.2025 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொதுத் தகவல் அலுவலர் திரு.சை.முகமது நாசர், வக்ஃபு ஆய்வாளர், தஞ்சாவூர் அவர்கள் இவ்வாணைய மின்னஞ்சலுக்கு 11.06.2026 அன்று முகவரியிட்டுள்ள கடிதத்தில், இவ்வழக்கின் மீது 26.11.2025 தேதியிட்ட ஆணையத்தின் உத்தரவுக்கிணங்க மனுதாரர் திரு.அசரப் அலி அவர்களுக்கு சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் 17.12.2025 தேதியிட்ட கடிதம் மூலம் 24.12.2025 அன்று நேரில் வந்து கோப்புகளை பார்வையிட்டு தேவைப்படும் நகலை எடுத்துக்கொள்ள அழைப்பு விடுத்தாகவும், ஆனால் மனுதாரர் நேரில் ஆஜராகவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார் (அதற்கான இணைப்புகளையும் இணைத்துள்ளார்).

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், ஆணையத்தின் 26.11.2025 தேதியிட்ட உத்தரவுக்குப்பின், பொதுத் தகவல் அலுவலரின் 17.12.2025 தேதியிட்ட கடிதம் வாயிலாக மனுதாரர் சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் தகவல் தொடர்பான ஆவணங்களை பார்வையிட அழைக்கப்பட்டுள்ளதும், மேற்படி

கடிதத்தினை மனுதாரர் 20.12.2025 அன்று பெற்றுக்கொண்டுள்ளதும் இன்றைய ஆவண பரிசீலனையில் தெரியவருகிறது. ஆனால், தகவல் தொடர்பான ஆவணங்களை பார்வையிட மனுதாரர் பொது அதிகார அமைப்பில் ஆஜராகவில்லை என பொதுத் தகவல் அலுவரால் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

3. இருப்பினும், பொதுத் தகவல் அலுவலர், இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன், இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தொடர்பான ஆவணங்களை சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் பார்வையிட்டு, தகவல் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

4. அதன்படி, மனுதாரர் சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் தகவல் தொடர்பான ஆவணங்களை பார்வையிட்டு, குறிப்பிட்டுக் கோரும் தகவல்களை 26.11.2025 தேதியிட்ட உத்தரவில் தெரிவித்துள்ளவாறு மனுதாரருக்கு வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டு, **இவ்வழக்கானது முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஒம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். NC 247/E/2025 (SA 13109/E/2024)</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
வக்ஃபு ஆய்வாளர்,
வக்ஃப் கண்காணிப்பாளர் அலுவலகம்,
ஈத்கா மஸ்ஜித்@ அலி குத்பா தைக்கால்,
இரயில்வே காலனி, தஞ்சாவூர்-613 001.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.அசரப் அலி,
எண்.628, மெயின் ரோடு,
பொதக்குடி, திருவாரூர் மாவட்டம்- 614 103.
மதுரை மாவட்டம் - 625 009.

Copy to: File MP/PA,